செ.வெ.எண்.16 நாள்.05.10.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு தடுப்பு தினத்தையொட்டி (பிரதி வியாழக்கிழமை) அம்பாசமுத்திரம் நகராட்சிப் பகுதி, அம்பை கலைக்கல்லூரியில் நடைபெற்ற மெகா தூய்மைப் பணிகள் மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். மேலும், டெங்கு விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு தடுப்பு தினத்தையொட்டி (பிரதி வியாழக்கிழமை) அம்பாசமுத்திரம் நகராட்சி பகுதி, அம்பை கலைக்கல்லூரியில் நடைபெற்ற மெகா தூய்மைப் பணிகள் மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகள் இன்று (05.10.2017) நடைபெற்றது. இப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார். மேலும், டெங்கு விழிப்புணர்வு பேரணியினை தொடங்கி வைத்து, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீரினை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, திருநெல்வேலி மாவட்டத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் டெங்கு தடுப்பு தினமாக கடைப்பிடித்து, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகளில் மெகா தூய்மைப் பணிகள் மற்றும் டெங்கு விழிப்புணர்வு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில், அம்பாசமுத்திரம் நகராட்சிக்குட்பட்ட அம்பை கலைக்கல்லூரியில் இன்று மெகா தூய்மைபணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கூட்டம், உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி, மற்றும் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டுள்ளது. இங்குள்ள மாணவ, மாணவிகளுக்கு நில வேம்பு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களும் வழங்கப்பட்டுள்ளது. இதுபோலவே, திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு தடுப்பு தினம் பிரதி வியாழக்கிழமை தோறும் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்து நடத்தப்படும் என தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, அம்பை கலைக்கல்லூரி வளாகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மரக்கன்று நடவு செய்து, தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் தொகுப்பு மரக்கன்றுகள் நடவு திட்டத்தின் கீழ் ரூ.5.60 இலட்சம் மதிப்பில் 325 மரக்கன்று நடவு செய்து, பராமரிக்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், அம்பாசமுத்திரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆர்.முருகையாபாண்டியன், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.இளம் பகவத்,இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, தமிழ்நாடு வீட்டுவசதி இணைய பெருந்தலைவர் திரு.சக்திவேல் முருகன், சுகாதாரப்பணிகள் துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், அம்பை நகராட்சி ஆணையாளர் திரு.முருகேசன், மாவட்ட சித்த மருத்துவ அலுவலர் மரு.மேபல் அருள்மணி, அம்பை கலைக்கல்லூரி முதல்வர் திரு.சுடலையாண்டி, கல்லூரி செயலர் திரு.தங்கபாண்டி, அம்பை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ராணி, திருமதி.விஜயசெல்வி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.